முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

OS.No. 30/2020

நாள் : 17.03.2026

PW4 : சிவகாமி, க/பெ. விஸ்வநாதன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில் 4ம் சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

என்னை சாட்சியமளிக்க எனது கணவர் வாதி விஸ்வநாதன் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் சொல்ல சொல்ல அது எழுதப்பட்டது. பிரதிவாதி கஸ்தூரி 16 லட்சம் கடன் வாங்கி உள்ளார் என்றால் 15 லட்சம் கடன் வாங்கினார் ஒரு லட்சம் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு எனது வீட்டுக்காரர் சொல்லி தெரியும். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 13ஆம் தேதி 2018 ஆம் வருடம் மாதம் சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லப்படும் தேதியில் நான் படித்துப் பார்த்தது காலை 9:00 மணி அளவில் இருக்கும். அன்றைய தேதியில் என்னிடம் எனது கணவர் ஒப்பந்தத்தை எனது கையில் கொடுத்து நான் அதைப் படித்துப் பார்த்தேன். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தமா அல்லது பதிவு செய்யப்படாததா என்று எனக்கு தெரியாது. மீதி கிரயத் தொகை கொடுப்பதற்காக காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. எனது கணவருக்கு காலக்கெடு தேவைப்பட்டதால் ஒப்பந்தத்தில் காலம் நிர்ணயிக்கப்பட்டது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு முடிந்த பிறகும் கிரயம் முடிப்பதற்கு இரண்டு ஆண்டுகள் எனது கணவருக்கு தேவைப்பட்டதா என்றால் ஆமாம். என்னை பின்பு வா.சா.ஆ.2 பத்திரம் எழுதுவதற்கு சாட்சி போட வேண்டும் என்று சொல்லி என்னை பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். வா.சா.ஆ.2 எழுதுவதற்கு நான் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது காலை 10 மணி இருக்கும். வா.சா.ஆ. 2 எழுதுவதற்கு பதிவாளர் அலுவலகம் சென்றபோது அங்கு வா.சா.ஆ.2 தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டு இருந்தது. என்னிடம் சாட்சி போட சொன்னார்கள் நான் சாட்சி போட்டு விட்டு வந்து விட்டேன். எனக்கு வா.சா.ஆ.2 பத்திரத்தில் சாட்சி போட்டதை தவிர அதில் வேறு விவரங்கள் தெரியாது. பிரதிவாதி கஸ்தூரியின் கணவருக்கும் எனது கணவருக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தை சம்பந்தமாகவும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாகவும் எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் ஃபைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை விவசாயம் தான் செய்து வந்தார். ரவிச்சந்திரன் எனக்கு பழக்கம் இல்லாதவர் என்றால் சரிதான். நான் முன்பின் அவரை பார்த்ததில்லை என்றால் சரிதான். ரவிச்சந்திரன் பிரதிவாதி கஸ்தூரியின் கணவர் என்றால் சரிதான். கஸ்தூரியையும் எனக்கு தெரியாது.

SAMEENA S
Digitally signed by SAMEENA S
Date: 2026.03.17 17:04:39 +0530

கஸ்தூரியை எனக்கு முன்பின் தெரியாது, பழக்கமும் இல்லை. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணம் டைப் செய்த ஆவணமா, பேனாவால் எழுதப்பட்ட ஆவணமா என்றால் டைப் செய்த ஆவணம் ஆகும். நான் முதன் முதலாக வா.சா.ஆ.2 ஆவணத்தை பார்த்தபோது அதில் டைப் செய்தவர் பெயர் லோகநாதன் என்று இருந்தது. லோகநாதனின் கையொப்பம் ஒவ்வொரு பக்கத்திலும் இருந்தது என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் இட்ட வா.சா.ஆ.2 ஆவணத்தின் முத்திரைத்தாள் யாரால், எப்போது வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் பேனாவால் தேதி, மாதம் பூர்த்தி செய்யப்படாத ஆவணத்தில் தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் தேதி '25' என பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 25 எப்போது யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கஸ்தூரியிடம் எனது கணவர் பலமுறை பணத்தை திருப்பி கேட்க சென்று அவர் கொடுக்காததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது கணவர் பிரதிவாதியிடம் பணம் கேட்கவில்லை. நான் இதற்கு முன்பு வேறு பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிரூபன வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் எனது ஞாபகத்தில் இருந்ததை வழக்கறிஞருக்கு சொன்னேன். எனது தாய் தந்தை பிறந்த தேதி எனக்கு தெரியாது எனது பெற்றோர்களின் திருமண தேதி தெரியாது எனது உடன் பிறந்தவர்கள் தேதி தெரியாது எனது கணவர் பிறந்த தேதி ஐப்பசி மாதம் ஆகும். நான் நேற்று நிருபன வாக்குமூலத்தை படித்து பார்த்ததில் வைத்துள்ள ஞாபகத்தை வைத்து இந்த சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் எனது கணவர் பத்திரத்தை கொடுத்து படிக்கச் சொன்னார். நான் பத்திரத்தை படித்து பார்த்துவிட்டு வீட்டிலிருந்து நேராக இந்த நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கிறேன். நிருபன பிரமாண பத்திரிகையை நான் நீதிமன்றத்தின் வெளியே வைத்து கையொப்பம் செய்தேன். எனது கணவர் நிரூபண வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றாலும் வாதி எனது கணவர் என்பதால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.03.17 17:04:48 +0530

Principal District and Sessions Judge,
Erode.